# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : திரு. **மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண். 51/ந/2024**
**நாள் 26.03 .2025**

திருமதி. K. நிர்மலாதேவி,
திருச்செங்கோடு, நாமக்கல் மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையாளர்,
திருச்செங்கோடு நகராட்சி, நாமக்கல் மாவட்டம். – எதிர்மனுதாரர்

நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டம், குமரமங்கலம் அஞ்சல், போக்கம்பாளையம், கதவு எண். 3/133, என்கிற முகவரியில் வசிக்கும் திருமதி. K. நிர்மலாதேவி என்பவரின் 27.03.2024 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 02.04.2024 அன்று பெறப்பட்டு, 51/ந/2024 என்ற எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டம், குமரமங்கலம் அஞ்சல், போக்கம்பாளையம், கதவு எண். 3/133, என்கிற முகவரியில் வசிக்கும் திருமதி. K. நிர்மலாதேவி என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள தனது புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார் :-

“திருச்செங்கோடு நகராட்சி ஆணையாளர் அவர்களுக்கு கடந்த 06.02.2022–ம் தேதியன்று மனுவுடன் ஆவணங்களை இணைத்து திருச்செங்கோடு 10–வது வார்டில் அ.தி.மு.க. வேட்பாளராக அறிவிக்கப்பட்ட திரு. வேலு மகன் திரு. ராஜவேலு மீது போலி ஆவணங்கள் தயார் செய்து அந்த ஆவணங்களை ரத்து செய்த பிறகு அதனை காண்பித்தாரா என்று தெரிவதற்கு ஆட்சேபனை மனு கொடுத்திருந்தேன்.

மேலும், இது சம்மந்தமாக 29.12.2023–ம் அன்று திருச்செங்கோடு நகராட்சியில் நகல் கேட்டபோது திருச்செங்கோடு நகராட்சி மேலாளர் திரு. குமரேசன் பெயர் தெரியாத அடையாளம் தெரிந்த மற்றும் இளநிலை உதவியாளர் திரு. யுவராஜ் ஆகியோர் எங்களிடம் எந்த ஆவணங்கள் கேட்டாலும் எங்களை பணி செய்யவிடாமல் தடுத்தாக காவல் துறையில் புகார் கொடுத்துவிடுவோம் என்று மிரட்டியுள்ளார்கள். ஏனென்றால் திருச்செங்கோடு 10–வது அ.தி.மு.க. வார்டு உறுப்பினர் திரு. ராஜவேலு ஆவணங்களை கேட்பதால், எங்கள் மீது புகார் கொடுப்பதாக மேலே குறிப்பிட்டுள்ள மூன்று நபர்களும் எனது மகன் மகேந்திரனை மிரட்டியுள்ளார்கள்.

08.01.2024, 22.01.2024 மற்றும் 29.01.2024 ஆகிய தேதிகளில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கு, மக்கள் குறைதீர்க்கும் நாளன்று மனு கொடுத்தும் இதுவரையில் திருச்செங்கோடு நகராட்சியால் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இதுவரையிலும் எந்த விசாரணைக்கு அழைக்கவில்லை, எந்த நகலும் வழங்கவில்லை. மேலும், நாங்கள் மனு கொடுக்கும் ஒவ்வொரு முறையும் உங்களுக்கு மதியம் 2.00 மணியளவில் அலைபேசியில் தொடர்பு கொள்வோம் என்று மனுவை பெறும் அதிகாரி கூறுவார். ஆனால், இதுவரையிலும் நாங்கள் கொடுத்த பல மனுவிற்கும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை'' என தெரிவித்துள்ளார்

2) மனுதாரரின் புகார் மனு குறித்து திருச்செங்கோடு நகராட்சி ஆணையாளரிடம் இம்முறைமன்ற நடுவத்தின் 29.07.2024 நாளிட்ட அறிவிப்பின் மூலம் அறிக்கை கோரப்பட்டது.

3) திருச்செங்கோடு நகராட்சி ஆணையர் தனது 13.09.2024 நாளிட்ட கடிதத்தில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்:-

"நகர்புற உள்ளாட்சி தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் தகுதி நீக்கம் செய்வது குறித்த தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் நகர்புற உள்ளாட்சி தேர்தல்கள் வேட்பாளர் கையேடு பக்கம் 2–ல் குற்றவியல் நீதிமன்றத்தால் 6 மாதத்திற்கு மேல் தண்டனை பெற்றிருப்பின் மாநகராட்சி சட்டம் 1981 மற்றும் 1971–ன்படி தண்டனை காலத்திலும் மற்றும் தண்டனை முடிவடைந்த நாளிலிருந்து 6 ஆண்டு காலத்திற்கு தேர்தலில் போட்டியிடுவதற்கு தகுதியற்றவராக கருதப்படுவார். இந்திய குற்ற தண்டனை விதி தொகுப்பு அத்தியாயம் IX-A-ன் கீழ் வரும் தேர்தல் குற்ற செயல்களுக்காகவோ தண்டனை பெற்றிருப்பின் தண்டனை பெற்ற நாளிலிருந்து 5 ஆண்டு காலத்திற்கு தேர்தலில் போட்டியிடுவதற்கு தகுதி அற்றவராக கருதப்படுவர்.

1955–ம் ஆண்டு குடியுரிமை பாதுகாப்பு சட்டத்தின் கீழ் (Protection of Civil Rights Act) தண்டனை பெற்றவராக இருத்தல் கூடாது என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் திரு. ராஜவேலு என்பவரது வேட்பு மனு ஏற்கப்பட்டது. மேலும், 28.12.2023–ஆம் தேதிய மனுவில் 06.02.2022–ஆம் தேதிய மனு மற்றும் அம்மனுவுடன் இணைக்கப்பட்ட ஆவணங்களின் நகல்களை வழங்க கோரியிருந்தார். திரு. மகேந்திரன் என்பவர் 29.12.2023 அன்று நகராட்சி அலுவலகத்திற்கு வருகை புரிந்து திரு. ராஜவேலு என்பவர் மீது நில அபகரிப்பு வழக்கு உள்ளது என்றும், அவரது வேட்பு மனுவை வழங்க கேட்டும் அவரை நகர்மன்ற உறுப்பினர் பதவியில் இருந்து பதவி நீக்கம் செய்யும்படியும் வாக்குவாதம் செய்து பணியாளர்களை பணி செய்ய விடாமல் தடுத்ததுடன் தகாத வார்த்தைகள் கொண்டு அவதுாறாக பேசியுள்ளார். இந்நிலையில் திருமதி. கே.நிர்மலாதேவி என்பவர் நாமக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் மக்கள் குறை தீர்க்கும் நாள் மனு எண்.7569774 மற்றும் 7630394, நாள் 22.01.2024 மற்றும் 29.01.2024–ல் மனுவில் கோரியுள்ளவாறு இவ்வலுவலக கடிதம் வாயிலாக திரு. ராஜவேலு என்பவரின் வேட்பு மனு நகல் மனுதாரருக்கு அனுப்பப்பட்டது.

08.01.2024, 22.01.2024 மற்றும் 29.01.2024 ஆகிய தேதிகளில் வரப்பெற்ற மனுக்களுக்கு 22.02.2024 தேதி பதில் விபரம் மனுதாரரின் மகன் திரு. மகேந்திரன் என்பவர் வசம் நேரில் வழங்கப்பட்டது மற்றும் மனுதாரர் மக்கள் குறைதீர் கூட்டத்தில் வழங்கிய மனுவிற்கு 11.03.2024 ஆம் தேதி பதில் விபரம் அனுப்பப்பட்டது என்பதை இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது. மனுதாரரின் புகாரில் உண்மை தன்மை இல்லை என்ற விபரத்தை இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது ' என தெரிவித்துள்ளார்.

4) மனுதாரரும் மற்றும் எதிர்மனுதாரரான திருச்செங்கோடு நகராட்சி ஆணையரும் 28.10.2024 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 25.09.2024 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5) மனுதாரர் திருமதி. K.நிர்மலா தேவி என்பவர் 28.10.2024 அன்று நடைபெற்ற விசாரணையில் கலந்துக்கொண்டு தனது வாக்குமூலத்தை இம்முறை மன்ற நடுவத்தில் அளித்துள்ளார்.

"நான் 08.05.2023 அன்று திருச்செங்கோடு நகராட்சி ஆணையாளர் அவர்களிடம் கொடுத்த புகார் மனுவிற்கு (திரு.ராஜவேல் மீது புகார் எண்.TN/MAWS/NMK11/COLLMGDP/08 MAX 23/5388742) நகராட்சி ஆணையாளரிடம் அளித்ததற்கு பதில் மனுவில், என் சொத்துக்களை பிரிப்பது சம்மந்தமாக பொய்யான தகவல் கொடுத்துள்ளார். மேலும் சிவில் வழக்கு நிலுவையில் உள்ளதாக கொடுத்துள்ளார். ஆனால் நான் எந்த ஒரு மனுவிலும் சொத்து பிரிப்பது சம்மந்தமாக கொடுக்கவில்லை. மேலும் இதற்காக எந்த ஒரு நீதிமன்ற ஆவணமோ, நீதிமன்ற எண்ணோ நகராட்சி ஆணையாளர் அவர்களால் சமர்ப்பிக்கப்படவில்லை. ஆகவே பொய்யான தகவலை கொடுத்த நகராட்சி ஆணையாளர் மீது நடவடிக்கை எடுக்குமாறு இம்முறைமன்ற நடுவத்தை கேட்டுக்கொள்கிறேன். மேலும் எனது 27.03.2024 நாளிட்ட புகார் மனுவில் தெரிவித்துள்ள விபரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறைமன்ற நடுவத்தை கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

6) எதிர்மனுதாரரான திருச்செங்கோடு நகராட்சி ஆணையர் திரு. ந. அருள் என்பவர் 28.10.2024 அன்று நடைபெற்ற விசாரணையில் கலந்துக்கொண்டு தனது வாக்குமூலத்தை இம்முறை மன்ற நடுவத்தில் அளித்துள்ளார்.

"திரு. ராஜவேலு வார்டு உறுப்பினர்–10 போலி ஆவணம் மூலம் நிலம் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு பின்னர் போலி என தெரிந்து பின்னர் சார்பதிவாளர் அப்பத்திரப் பதிவை ரத்து செய்து 2021 –ம் வருடம் உத்தரவிடப்பட்டது. இந்நில மோசடி குறித்து மாவட்ட கண்காணிப்பாளர் அவர்களிடம் சார்பதிவாளர் அவர்களால் புகார் அளிக்கப்பட்டது என தெரிவிக்கப்பட்டது. மனுதாரர் கோரியவாறு வார்டு உறுப்பினர் திரு.ராஜவேலு என்பவரது பதவியை தகுதி நீக்கம் செய்ய இயலாது. ஏனெனில் தமிழ்நாடு மாவட்ட நகராட்சி சட்டம் 1920 பிரிவு 49–ன் கீழ் நீதிமன்றத்தால் குற்றவாளி என தீர்ப்பு பெறப்பட்டால் தான் தகுதி நீக்கம் செய்ய இயலும் என இந்த முறைமன்ற நடுவத்தின் முன் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் எனது 13.09.2024 நாளிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ள விபரங்களை எனது மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறைமன்ற நடுவத்தை கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

7. மனுதாரரின் புகார் மனு மற்றும் வாக்குமூலம் , திருச்செங்கோடு நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் வாக்குமூலம், மற்றும் இதர ஆவணங்களை இம்முறைமன்ற நடுவத்தினால் மிகக் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:

திரு. ராஜவேலு, 10வது வார்டு உறுப்பினர், தேர்தல் சமயத்தில் சமர்ப்பித்த ஆவணங்களை திருச்செங்கோடு நகராட்சி தர மறுப்பதாகவும், நகராட்சி பணியாளர்கள் மிரட்டுவதாகவும் மனுதாரர் திருமதி. கே. நிர்மலாதேவி தனது புகார் மனுவில் தெரிவித்துள்ளார். திருமதி. கே. நிர்மலாதேவி என்பவரால் மக்கள் குறை தீர்க்கும் நாளில் கொடுக்கப்பட்ட மனு எண்.7569774 மற்றும் 7630394, நாள் 22.01.2024 மற்றும் 29.01.2024–ற்கு நகராட்சி கடிதம் வாயிலாக மனுதாரர் கோரியவாறு திரு. ராஜவேலு என்பவரின் வேட்பு மனு நகல் மனுதாரருக்கு அனுப்பப்பட்டதாகவும், 08.01.2024, 22.01.2024 மற்றும் 29.01.2024 ஆகிய தேதிகளில் வரப்பெற்ற மனுக்களுக்கு 22.02.2024 தேதி பதில் விபரம் மனுதாரரின் மகன் திரு. மகேந்திரன் என்பவர் வசம் நேரில் வழங்கப்பட்டுள்ளதாகவும் திருச்செங்கோடு நகராட்சி ஆணையாளரின் அறிக்கை மற்றும் வாக்குமூலம் வாயிலாக தெரியவருகிறது.

2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், தமிழ்நாடு மாநிலத்தில் உள்ள உள்ளாட்சி அமைப்புகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் கீழ் பணி செய்து கொண்டிருக்கும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுகளின் மீதான விசாரணைக்காக முறைமன்ற நடுவர் அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

ஆனால் மனுதாரர் அளித்துள்ள புகார் மனுவானது உள்ளாட்சி அமைப்பில் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் குறித்ததாக இருப்பதால், இப்பொருள் உள்ளாட்சி தேர்தல் தொடர்பான புகார் என்பதாலும், இம்முறைமன்ற நடுவ வரம்பிற்குட்பட்டதல்ல என்பதாலும், இப்புகார் மனுமீதான நடவடிக்கையினை உள்ளாட்சி தேர்தல் அமைப்பான செயலாளர், தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் மூலம் தீர்வு காணுமாறு மனுதாரரை அறிவுறுத்தலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

2025–ஆம் ஆண்டு, மார்ச் திங்கள் 26 –ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திருமதி. கே. நிர்மலாதேவி,
க/பெ. கன்னியப்பன்,
3/133, போக்கம்பாளையம்,
குமாரமங்கலம் அஞ்சல், திருச்செங்கோடு வட்டம்,
நாமக்கல் மாவட்டம் – 637 205.

2) நகராட்சி ஆணையர்,
திருச்செங்கோடு நகராட்சி,
நாமக்கல் மாவட்டம்

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

4) ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்
இ.கோ/உதிரி

// ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

27/3/25
செயலாளர்

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
வாய்மையே வெல்லும்
சென்னை–600 032